

உடல் நலக் குறைவினால் இராயபுரம் அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்ற, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் அவர்களை துணை முதலமைச்சரும், இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர்,எம்.எல்.ஏ, எம்.எல்.ஏ.க்கள் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபிநேசர், தா.இளைய அருணா எம்.சி. உள்பட கழக நிர்வாகிகள், குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் – வில்வித்தி மதுரா புதூர் கிராமத்தில்

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் – நிதியுதவி!

சென்னை, அக். 15 - கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், வில்வித்தி மதுரா புதூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்து நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், வில்வித்தி மதுரா புதூர் கிராமத்தில் வசிக்கும் திரு. சுப்பிரமணியன் (வயது 47) த/பெ.சடையன் என்பவர் கடந்த 12.10.2025 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் அவரது வீட்டிற்கு வெளிப்புறத்தில் ஈரத்துணியினை கொடியில் போடுவதற்கு முற்படும்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த சுப்பிரமணியன் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி பாக வாரியாக பொறுப்பாளர்கள் நியமனம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



### அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி - அண்ணாநகர் தெற்கு பகுதி

| வ. எண் | பகுதி | ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் | மொத்தம் | நிர்வாகிகள் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | அண்ணாநகர் தெற்கு பகுதி பூத் எண்ணிக்கை – 114 | 160, 161, 162, 163, 164, 165, 166, 167, 168, 169, 170, 171 | 25 | பாபு |
| 2 | | 172, 173, 174, 175, 176, 177, 178,179, 180, 186, 191, 193, 194 | | இளையராஜா |
| 3 | | 185, 189, 195, 196, 198, 199 | 14 | அர்ஜூனன் |
| 4 | | 181, 182, 183, 184, 202, 203, 204, 207 | | கோபி |
| 5 | | 187, 188, 190, 192, 197, 200, 201, 205, 206, 208 | 16 | V.N.R. பாபு |
| 6 | | 223, 249, 250, 251, 252, 253 | | காசிநாதன், சங்கர் |
| 7 | | 214, 215, 216, 217, 218, 219, 220, 221, 222, 246, 247, 248 | 24 | கமல் |
| 8 | | 224, 225, 226, 234, 236, 237, 238, 239, 240, 241, 242, 243 | | வினோத்குமார் |
| 9 | | 148, 149, 209, 210, 211, 212, 213, 227, 228, 229 | 17 | வேலாயுதம் |
| 10 | | 230, 231, 232, 233, 235, 244, 245 | | ஜனா |
| 11 | | 140, 141, 142, 143, 144, 145, 146, 147, 150, 153 | 18 | அருள் |
| 12 | | 151, 152, 154, 155, 156, 157, 158, 159 | | ராஜகோபால் |

### அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி - அண்ணாநகர் வடக்கு பகுதி

| வ. எண் | பகுதி | ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் | மொத்தம் | நிர்வாகிகள் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | அண்ணாநகர் வடக்கு பகுதி பூத் எண்ணிக்கை – 139 | 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 116, 117,118, 120 | 20 | நாகராஜ் |
| 2 | | 119, 121, 122, 123, 125, 126, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 135, 136, 137, 138 | 19 | சௌந்தர்யா |
| 3 | | 50, 57, 70, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83, 84 | 17 | ராகுல் |
| 4 | | 69, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 124 | 17 | விஜயகுமார் |
| 5 | | 41, 42, 43, 44, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68 | 15 | திவாகர் |
| 6 | | 1, 7, 8, 9, 45, 46, 47, 48, 49, 51, 52, 53, 54, 55, 56 | 15 | அன்பழகன் |
| 7 | | 2, 3, 4, 5, 6, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 24, 25, 26, 27, 28, 29, 30, 31 | 21 | ஓம்பிரகாஷ் |
| 8 | | 18, 19, 20, 21, 22, 23, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40 | 15 | சிவகுமார் |

### ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி - ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி

| வ. எண் | பகுதி | ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் | மொத்தம் | நிர்வாகிகள் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி பூத் எண்ணிக்கை – 125 | 66, 67, 68, 69, 70, 71, 72 | 14 | ப. சுரேஷ் சங்கரநாராயணன் |
| 2 | | 73, 74, 75, 76, 77, 78, 79 | | சுரேந்திரன்; சதிஷ்குமார் |
| 3 | | 80, 81, 82, 83 | 13 | சுரேஷ்குமார் |
| 4 | | 84, 85, 86, 87, 88 | | அனந்தராமன்; கீர்த்திவாசன் |
| 5 | | 89, 90, 91, 92 | | ஆனந்தன் |
| | | 106, 107, 108, 109, 110, 111 | 12 | நடேசமூர்த்தி |
| 6 | | 112, 113, 114, 115, 116, 118 | | பாண்டி மீனா, தனசேகர் |
| 7 | | 117, 119, 120, 121, 122, 191 | 12 | B. விக்னேஷ் பாலசுப்ரமணியம் |
| 8 | | 179, 180, 181, 182, 183, 189 | | காமேஷ் |
| 9 | | 173, 174, 175, 176, 184, 185, 186 | 11 | S. சதிஷ்குமார் |
| 10 | | 187, 190, 192, 193 | | ஷியாம் ராஜ் |
| 11 | | 207, 208, 209, 210, 211, 212, 213, 214, 215, 216, 217, 218, 219, 220, 221, 222 | 20 | பிரபு |
| 12 | | 203, 204, 205, 206 | | சந்தோஷ் குமார் |
| 13 | | 123, 177, 178, 188, 195, 196, 197, 198, 199, 200, 201, 202 | 12 | ராஜேஸ்வர பாண்டியன் |
| 14 | | 93, 94, 95, 96, 97, 98, 99, 100 | 13 | T. சுரேஷ் குமார் |
| 15 | | 101, 102, 103, 104, 105 | | செந்தில் |
| 16 | | 223, 224, 225, 226, 227, 228, 229,230, 231 | 18 | C. சதிஷ் |
| 17 | | 194, 232, 233, 234, 235, 236, 237, 238, 239 | | நவீன்குமார் |

### ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி - ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி

| வ. எண் | பகுதி | ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் | மொத்தம் | நிர்வாகிகள் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி பூத் எண்ணிக்கை – 114 | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11 | 22 | அகிலா |
| 2 | | 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22 | | கே. வெங்கடேசன் |
| 3 | | 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33 | 21 | S. அமர்நாத் |
| 4 | | 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43 | | D. தர்மராஜன் |
| 5 | | 44, 45, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 65, 124, 125, 126 | 14 | கே. வெங்கடேசன் |
| 6 | | 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 141, 142, 143, 144 | 18 | M. தமிழ்செல்வன் |
| 7 | | 46, 47, 56, 57, 58, 59, 60, 61, 62, 63 | 19 | அருளரசன் |
| 8 | | 64, 153, 154, 159, 161, 162, 163, 164, 165 | | R. சீனிவாசன் |
| 9 | | 145, 146, 147, 148, 149, 150, 151, 152, 155, 156 | 20 | ராஜேஷ் |
| 10 | | 157, 158, 160, 166, 167, 168, 169, 170, 171, 172 | | D. வேல்முருகன் |

### சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி - சேப்பாக்கம் பகுதி

| வ. எண் | பகுதி | ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் | மொத்தம் | நிர்வாகிகள் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | சேப்பாக்கம் பகுதி பூத் எண்ணிக்கை – 107 | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17 | 17 | சந்திரநாதன் |
| 2 | | 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32 | 15 | சிவகார்த்திகேயன் |
| 3 | | 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44 | 12 | கார்த்திக் |
| 4 | | 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60 | 16 | துஷ்யந்தினி |
| 5 | | 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 120, 121, 126 | 15 | சங்கர் கணேஷ் ஜெயவேல் |
| | | 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83, 110, 111, 112, 113, 114, 119 | 16 | பூங்குன்றன் |
| 6 | | 149, 150, 151, 152, 153, 154, 155, 156, 157, 158, 159, 160, 161, 162, 163, 164 | 16 | முத்துச்செல்வன் |

### சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி - திருவல்லிக்கேணி பகுதி

| வ. எண் | பகுதி | ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் | மொத்தம் | நிர்வாகிகள் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | திருவல்லிக்கேணி பகுதி பூத் எண்ணிக்கை – 114 | 122, 123, 124, 125, 126, 127, 128, 129, 130, 131. | 19 | மணிகண்டன் |
| 2 | | 132, 141, 142, 143, 144, 145, 146, 147, 148 | | ஷாலினி |
| 3 | | 84, 85, 86, 87, 88, 89, 90, 117, 118, 119 | 17 | ஜெயபிரகாஷ் |
| 4 | | 91, 92, 93, 94, 95, 96, 97 | | ஆசிப் |
| 5 | | 98, 99, 100, 101, 102, 103, 104 | 14 | வெங்கடேஷ் |
| 6 | | 105, 106, 107, 108, 109, 115, 116 | | |
| 7 | | 165, 166, 167, 168, 169, 170, 171 | 14 | ராஜேஷ் |
| 8 | | 172, 173, 174, 175, 176, 197, 199 | | |
| 9 | | 177, 178, 179, 180, 181, 182 | 11 | பாலாஜி |
| 10 | | 183, 184, 185, 192, 198 | | |
| 11 | | 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 191, 193 | 18 | வினோத்குமார் |
| 12 | | 186, 187, 188, 189, 190, 194, 195, 196 | | |
| 13 | | 200, 201, 202, 203, 204, 205, 206, 207, 208, 209, 210, 211 | 21 | அப்துல் சுபான் |
| 14 | | 212, 213, 214, 215, 216, 217, 218, 219, 220. | | மௌலி |

**நே.சிற்றரசு**
செயலாளர் - சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# விபத்து, ஒலி, மாசற்ற தீபாவளியைக் கொண்டாடுவீர்!

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வேண்டுகோள்!

சென்னை, அக்.15–

தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியைவெளிப்படுத்துவார்கள். அதே வேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன. பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும்காற்று மாசினால் சிறுகுழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய்வாய்பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது 23.10.2018–ஆம் நாளிட்ட ஆணையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனை களை விதித்தது.

மேலும், உச்ச நீதிமன்றம் தனது ஆணையில், பட்டாசுகளை வெடிப்பதால் காற்றின் தரம் பாதிக்கப்படுவது குறித்து போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், திறந்தவெளியில் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க மாநில அரசுகள் வலியுறுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு 2018–ஆம் ஆண்டிலிருந்து தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது. இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகை தினத்தன்று, கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பட்டாசுகளை வெடிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடு குறித்தும் உடல் நலனில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், போதிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

அதன்படி மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், தேசிய பசுமை படைகள், பசுமை மன்றங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மூலம் பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி கல்வித்துறை, உயர்கல்வித்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் ஆகிய துறைகளின் செயலாளர்கள், காவல்துறை இயக்குநர், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், சுற்றுச்சூழல் துறை இயக்குநர், மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் ஒத்துழைப்போடு அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் உச்சநீதிமன்ற ஆணையின்படி நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

சுற்றுச்சூழலை பாதிப்பு இல்லாமல் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் ஆகும். இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் கீழ்கண்டவற்றைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

பாதுகாப்பான தீபாவளிக்கு பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

1. பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்றுமாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமைபட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும்.

2. மாவட்ட நிர்வாகம் / உள்ளாட்சி அமைப்புகளின் முன் அனுமதியுடன், பொதுமக்கள் திறந்த வெளியில் ஒன்று கூடி கூட்டாக பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச்சங்கங்கள் மூலம் முயற்சிக்க வேண்டும்.

தவிர்க்க வேண்டியவை

1. அதிக ஒலி எழுப்பும் மற்றும் தொடர்ச்சியாக வெடிக்கக் கூடிய சரவெடிகளை தவிர்க்க வேண்டும்.

2. மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

3. குடிசை பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.

### மயிலை த.வேலு தலைமை! ஜெ.கருணாநிதி

### நந்தனம் கி.மதி - எஸ்.முரளி – கே.ஏழுமலை முன்னிலை!

# சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி நிர்வாகிகள் கூட்டம்!

## பி.கே.ராஜேஷ் கண்ணா அறிக்கை!

சென்னை, அக். 15

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் பி.கே.ராஜேஷ் கண்ணா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் கிழக்கு, மயிலாப்பூர் மேற்கு மற்றும் தியாகராயர் நகர் கிழக்கு, தியாகராயர் நகர் மேற்கு பகுதி அயலக அணியின் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் நாளை (16.10.2025 வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு, மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, நந்தனம் கி.மதி எம்.சி, எஸ்.முரளி, கே.ஏழுமலை எம்.சி., ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே மாவட்ட அயலக அணியின் மாவட்டத் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் பி.கே.ராஜேஷ் கண்ணா தெரிவித்துள்ளார்.



கடலூர்மாவட்டம், திட்டக்குடிசட்டமன்றத்தொகுதி, ரெட்டாக்குறிச்சி கிராமத்தில் இடி – மின்னல் தாக்கியதில் சுப்பிரமணியன் அவர்களின் வீடு முழுவதும் எரிந்து சேதமடைந்த வீட்டை தொழிலாளர் நலன்மற்றும்திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்சி. வெ.கணேசன் நேரில் சென்று பார்வையிட்டு நிதியுதவி மற்றும் நலத்திட்டஉதவிகள் வழங்கி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



திருச்சி காஜாமலை நூர் மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நலவாரிய உறுப்பினர் திருச்சி சேகர் மாமன்ற உறுப்பினர் காஜாமலை விஜி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.